**தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் திருமதி.ஆர்.வி.ஷஜீவனா, இ.ஆ.ப.,**

ந.க.எண்.3905/2023/பேரூ2 நாள். .11.2024

பொருள்: பணியமைப்பு–பேரூராட்சிகள் நிருவாகம் – தேனி மண்டலம் –தேனி மாவட்டம்–தேவாரம் மற்றும் குச்சனூர் பேரூராட்சி– 20% ஒதுக்கீட்டின் அடிப்படையில் – பணி மாறுதல் மூலம் வரித்தண்டலர்களாக நியமனம் செய்து அரசாணை வெளியிடப்பட்டது–பணியில் சேர்ந்து ஓராண்டு பணிக்காலம் நிறைவு செய்துள்ளது – பணியினை ஒழுங்குபடுத்தி – ஆணையிடுதல்.

பார்வை:
1) அரசாணை(நிலை)எண்.150,நகராட்சிநிர்வாகம்மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்:19.08.1998
2) அரசாணை(நிலை)எண்.111, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்;08.08.2023
3) தேனி மாவட்ட ஆட்சித்தலைவரது செயல் முறைகள் ந.க.எண்.3905/2023/பேரூ2, நாள்:22.09.2023
4) அரசாணை (நிலை) எண்.800, ஊரக வளர்ச்சித் துறை, நாள்:16.12.1988
5) சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்
6) தொடர்புடைய ஆவணங்கள்.

...............

**ஆணை:**

தேனி மாவட்ட பேரூராட்சிகளில் 2017–2018 முதல் 2019–2020 முடிய உள்ள ஆண்டுகளில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் ஏற்பட்ட காலியிடங்களில் பார்வை 1–இல் காணும் அரசாணையின் அடிப்படையில், 20% பணியிடங்களில் பணி மாறுதல் மற்றும் நியமனம் மூலம் திரு.சு.வேல்முருகன் மற்றும் திரு.மு.ரெங்கசாமி ஆகிய இரண்டு கீழ்நிலை பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கி பார்வை 2–இல் காணும் அரசாணையின்படி ஆணையிடப்பட்டதன் தொடர்ச்சியாக பார்வை 3–இல் காணும் தேனி மாவட்ட ஆட்சித்தலைவரது செயல்முறைகளின்படி தனியர்களுக்கு பணியிடம் வழங்கப்பட்டு பின்வரும் விவரப்படி பணிபுரிந்து வருகிறார்கள்.

Scanned with OKEN Scanner

| வ. எண் | தேர்வு செய்யப்பட்ட பணியாளர் பெயர்/ பதவி (திருவாளர்கள்) | 20% அடிப்படையில் வழங்கப்பட்ட பணியிடம் / பேரூராட்சி | வரித்தண்டலர் பணியில் பணியேற்ற நாள் | இரண்டு பணிக் காலம் பூர்த்தி செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | சு.வேல்முருகன் மதகுதிறப்பாளர் அனுமந்தன்பட்டி பேரூராட்சி | வரித்தண்டலர் தேவாரம் பேரூராட்சி | 27.09.2023 முற்பகல் | 26.09.2024 முற்பகல் |
| 2 | மு.ரெங்கசாமி தூய்மை பணியாளர் ஆண்டிபட்டி பேரூராட்சி | வரித்தண்டலர் குச்சனூர் பேரூராட்சி | 27.09.2023 முற்பகல் | 26.09.2024 முற்பகல் |

2) தனியர்களின் பணியினை, தமிழ்நாடு அமைச்சு பணியில் தனியர்கள் பணியமர்த்தப்பட்ட நாள் முதல் பின்வருமாறு பணி வரன்முறை செய்து தே[illegible] மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பதவி (திருவாளர்கள்) | தற்போது பணிபுரியும் பேரூராட்சி | பணியேற்ற நாள் / பணி வரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | சு.வேல்முருகன் வரித்தண்டலர் | தேவாரம் பேரூராட்சி | 27.09.2023 முற்பகல் |
| 2 | மு.ரெங்கசாமி வரித்தண்டலர் | குச்சனூர் பேரூராட்சி | 27.09.2023 முற்பகல் |

3) இப்பொருள் குறித்து சம்மந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும், அதற்கான சான்றினை உடன் சமர்ப்பிக்கவும் தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
தேனி மாவட்டம்.

**பெறுநர் :**
சம்மந்தப்பட்ட பணியாளர்கள்,
(செயல் அலுவலர்கள் மூலமாக)

**நகல் :**
1) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 003
2) பேரூராட்சிகளின் இயக்குநர், நகர் நிருவாக அலுவலகம், சென்னை-600 028
3) செயல் அலுவலர், தேவாரம் / குச்சனூர் பேரூராட்சிகள் தேனி மாவட்டம்.
4) உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை , தேனி
5) பேரூ2 பிரிவு இருப்புக் கோப்புக்கு